# IN THE COURT OF THE I ADDITIONAL DISTRICT JUDGE, SALEM.

## அசல் வழக்கு எண். 143/2020

சாட்சி : PW– 1
பெயர் : திரு. பாபு தேதி : 18.11.2024

(சாட்சி திரும்ப அழைக்கப்பட்டு சத்யபிரமாணம் செய்து வைக்கப்பட்டு குறுக்குவிசாரணை செய்யப்பட்டார். )

**குறுக்குவிசாரணை தொடர்ச்சி**:– ( பிரதிவாதி தரப்பில்)

தாவா சொத்தை எனக்கு விற்பனை செய்தவர் தனஞ்செயன் மற்றும் சாந்தி ஆகியோர்களிடமிருந்து கிரயம் பெற்றிருந்தார். எனக்கு விற்பனை செய்த சுரேந்திரன் என்பவருக்கு சொத்து 29.10.1990 தேதிய கிரய பத்திரப்படி பாத்தியப்பட்டிருப்பதாக வா.சா.ஆ.–2 ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. 29.10.1990 தேதியிட்ட அசல் கிரய பத்திரத்தை தாக்கல் செய்துள்ளேன். வா.சா.ஆ.–1 கிரய பத்திரத்தில் சொத்து விவரத்தில் கிழமேல் நீளம் 40 லிங்ஸ் என்றும், தென்வடல் நீளம் 80 லிங்ஸ் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். ஒரு லிங்ஸ் என்பது 9 அங்குலம் என்று சொன்னால் அதுபற்றி எனக்கு தெரியாது. நான் கிரயம் பெற்ற கிரய பத்திரத்தில் சொத்து விவரத்தில் அடி குறிப்பிடப்பட்டுள்ளது. பிழை திருத்தம் செய்து அதன்பிறகு அடி குறிப்பிடப்பட்டது. பதிவாளர் அலுவலகத்தில் லிங்ஸ் தற்பொழுது குறிப்பிடுவது வழக்கத்தில் இல்லை என சொன்னதால் என்னுடைய கிரய பத்திரத்தில் அடி குறிப்பிடப்பட்டுள்ளது. நான் சொல்வதுபோல் பிழை திருத்த பத்திரம் ஏற்படவில்லை என்று சொன்னால் சரியல்ல. வா.சா.ஆ.–6 ஆவணம்தான் பிழை திருத்தம் பத்திர்ம் ஆகும். வா.சா.ஆ.–6 ஆவணத்தின்படி சர்வே எண். தவறாக உள்ளது என்பதால்தான் பிழை திருத்தம் செய்யப்பட்டுள்ளது என்றும், நான் சொல்வதுபோல் லிங்ஸ் பற்றி பிழை திருத்தம் செய்யப்படவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. வா.சா.ஆ.–6 ஆவணத்தில் சர்வே எண். சம்மந்தமாக பிழை திருத்தம் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

வா.சா.ஆ.–1 ஆவணத்தின்படி 40 லிங்ஸ் மற்றும் 80 லிங்ஸ் ஆகியவைகளின் சதுர அடி 1600 மட்டுமே வரும் என்று சொன்னால் அதுபற்றி எனக்கு தெரியாது. வா.சா.ஆ.– 1 ஆவணம் உரிமையில்லாத சொத்தைப் பற்றி ஏற்படுத்தப்பட்ட ஆவணம் என்று சொன்னால் சரியல்ல.

வா.சா.ஆ.–5 ஆவணத்தில் லிங்ஸ் கணக்கு குறிப்பிடப்பட்டு கிரயம் பெறப்பட்டுள்ளது. வா.சா.ஆ.–2 ஆவணத்துடன் இணைக்கப்பட்டுள்ள வரைபடத்தில் டாக்டர். சம்பூ என்பவருக்கு 6280 சதுர அடி நிலம் உள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது. வா.சா.ஆ.–2 ஆவணத்துடன் இணைக்கப்பட்டுள்ள வரைபடத்தில் T.N. சுரேந்திரன் என்பவருக்கு 4800 சதுர அடி மற்றும் 4800 சதுர அடி நிலம் உள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது. டாக்டர். சம்பூ, T.N. சுரேந்திரன், சாந்தி தனஞ்செயன் ஆகியோர்கள் வா.சா.ஆ.–5 ன்படி வாங்கிய சொத்தின் மொத்த விஸ்தீரணம் 37 சென்ட் நிலம் ஆகும். ஏற்கனவே 37 சென்ட் வாங்குவதற்கு முன்பே பாதை ஏற்படுத்தப்பட்டிருந்தது. கிரயம் பெற்றபிறகு பாதை ஏற்படுத்தப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. ஏற்கனவே வடபுறத்தில் 30 அடி பாதை இருந்ததால்தான் நான் கிரயம் பெற்றேன். ஏற்கனவே கிரயம் பெற்ற சொத்தில் வடபுறத்தில் 30 அடி பாதை இல்லை என்று சொன்னால் சரியல்ல. 37 சென்ட்டில் 30 அடி அகலத்தில் பாதை போடப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல. அந்த பாதையை கழித்துவிட்டால் தாவா சொத்தில் சம்பூ, சுரேந்திரன் மற்றும் சாந்தி வகையறா ஆகியோர்களுக்கு எந்தவித உரிமையும் பாத்தியமும் கிடையாது என்று சொன்னால் சரியல்ல.

வா.சா.ஆ.–8 முதல் வா.சா.ஆ.–10 வரையான ஆவணங்களை தாக்கல் செய்துள்ளேன். 1995 முதல் தாவா சொத்தை ஆரம்பத்தில் குருமூர்த்தி என்பவரும், அதன்பிறகு சிவலிங்கம் என்பவரும் தற்பொழுது பிரதிவாதியும் அனுபவித்து வருகின்றனர் என்று சொன்னால் சரியல்ல. வா.சா.ஆ.–8 முதல் 10 வரையான ஆவணங்கள் உண்மையானது என்று சொன்னால் சரியல்ல. அதனால்தான் வா.சா.ஆ.– 8 முதல் 10 வரையான ஆவணங்களை ரத்து செய்ய தனியாக பரிகாரம்

கேட்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. பிரதிவாதிக்கு தாவா சொத்து பாத்தியம் என்று சொன்னால் சரியல்ல. நான் கிரயம் பெற்ற பத்திரம் செல்லாது என எதிர்கோரிக்கை செய்யப்பட்டுள்ளது என்று சொன்னால் அதுபற்றி எனக்கு தெரியாது.

பிரதிவாதி தாக்கல் செய்துள்ள பதிலை நான் படித்துப் பார்த்தேன். அந்த பதிலை நான் ஏற்றுக்கொள்ளவில்லை. பிரதிவாதி தாக்கல் செய்துள்ள எதிர் கோரிக்கையில் கோரியுள்ள பரிகாரம் பிரதிவாதிக்கு கிடைக்கக்கூடியது என்பதால்தான் நான் எதிர் கோரிக்கைக்கு பதிலுரை தாக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. எனக்கு விற்பனை செய்தவர்களுக்கு சொத்து பாத்தியம் இல்லை என்பதால் தான் விளம்புகை பரிகாரம் கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்து பிரதிவாதிக்கு பாத்தியப்பட்டு பிரதிவாதி அனுபவத்தில் உள்ளது என்று சொன்னால் சரியல்ல. பொய்யான கிரய பத்திரம் ஏற்படுத்தியுள்ளேன் என்று சொன்னால் சரியல்ல.

தாவா சொத்தை அளவீடு செய்ய நீதிமன்ற ஆணையர் நியமிக்க மனு தாக்கல் செய்யவில்லை. அவ்வாறு அளவீடு செய்தால் சுரேந்திரன் என்பவருக்கு சொத்து பாத்தியமில்லை என்பது தெரிந்துவிடும் என்று சொன்னால் சரியல்ல. பிரதிவாதி கம்பி வேலி போட்டு பெயர் பலகை வைத்திருந்தார் என்று சொன்னால் சரியல்ல. நான் கிரயம் பெற்று தாவா சொத்தை சுத்தம் செய்த பிறகு தான் பிரதிவாதி அவரின் பெயர் எழுதி போர்டு வைத்தார். நான் கிரயம் பெற்றபோதே பிரதிவாதி தாவா சொத்தில் போர்டு வைத்துவிட்டார் என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்து பிரதிவாதிக்கு முழுமையாக பாத்தியப்பட்டது என்றும், பிரதிவாதியின் சுவாதீனத்தில் உள்ளது என்றும் சொன்னால் சரியல்ல. தாவா சொத்து என்னுடைய சுவாதீனத்தில் இருந்து வருகிறது. தாவா சொத்து என்னுடைய சுவாதீனத்தில் உள்ளது என்பதற்கு ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல. வா.சா.ஆ.–11 ஆவணம் தாவா சொத்திற்கு கிழபுறம் உள்ள சொத்திற்கு சம்மந்தப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. வழக்கு செலவு தொகையுடன் தள்ளுபடி

**செய்யப்படவேண்டும் என்று சொன்னால் சரியல்ல. பிரதிவாதியின் எதிர் கோரிக்கை பிரதிவாதிக்கு சாதகமாக தீர்ப்பாக வேண்டும் என்று சொன்னால் சரியல்ல.**

**மறுவிசாரணை –** இல்லை.

Sd./- N. Ramakrishnan

I Additional District Judge,
Salem.